ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ   அதிவிசேஷமானது

අංක 2127/37 - 2019 ජූනි මස 14 වැනි සිකුරාදා - 2019.06.14
*2127/37 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*33 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்*

எனது இல. : எம்சீயூடீபி/எல்ஏ/எஸ்ரி.எஸ்ஈபீ நோர்த்(டபிள்யூ09)/14/01.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் இல. 4-3/10/2013/எல்ஆர்பீ/524.

கொழும்பு மாநகர் சார்ந்த நகர அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2014.12.22 ஆம் திகதிய 1894/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டின் 386 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை மூலம் அரசுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2015.07.09 ஆம் திகதிய கோ. 9557 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்திற்குரியதுமான கீழ்க் காணும் அட்டவணை இல. 1 தொடக்கம் 2 வரை விபரிக்கப்பட்டுள்ள உரித்துக் கோரல் முன்வைக்கப்படாத காணித் துண்டுகளுக்காக செலுத்த வேண்டிய நட்டஈட்டுத் தொகையை இக்காணித் துண்டுகளுக்கு உரித்துக் கோருவோர் பெற்றுக் கொள்ளக் கூடியவாறு காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 33 ஆம் பிரிவின் கீழ் குறித்த வழக்கு இலக்கங்களின் கீழ் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது என்பதை பொது மக்களுக்கு இத்தால் அறியத் தருகின்றேன்.

கீழ்க் காணும் காணித் துண்டுகளுக்கு உரித்துக் கோருவோர் இருப்பின் தத்தமது உரித்துரிமையை கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திடம் முன்வைத்து தமக்குரிய நட்டஈட்டுத் தொகையை பெற்றுக் கொள்ளுமாறு தொடர்ந்தும் பொது மக்களுக்கு இத்தால் அறியத் தருகின்றேன்.

சீ. டபிள்யூ. அபேசூரிய,
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
கொழும்பு மாநகர் சார்ந்த நகர அபிவிருத்திக் கருத்திட்டம்
கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவு.

கொழும்பு மாநகர் சார்ந்த நகர அபிவிருத்திக் கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகம்,
இலங்கை காணி மீட்புக்கும் அபிவிருத்திக்குமான கூட்டுத்தாபனம்,
இல. 3 ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிக்கடை, இராஜகிரிய.
2019, யூன் 13.

**அட்டவணை 1**

| | |
|---|---|
| மாகாணம் | மேல் மாகாணம் |
| மாவட்டம் | கொழும்பு |
| பிரதேச செயலாளர் பிரிவு | கொழும்பு |
| கிராமம் | கொட்டாஞ்சேனை |
| காணியின் பெயர் | நாகலகம் வீதியில் வரி மதிப்பீட்டு இல. 280 ஐ உடைய காணி |
| வரைபட இல. | ஆ. வ. இல. 9557 |

1A – G 30299 – 16 (2019/6)
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

| | |
|---|---|
| துண்டு இல. | துண்டு இல. 103 |
| விஸ்தீரணம் | 0.0018 |
| வழக்கு இல. | டீஎல்ஏ 78/17 |
| வைப்புச் செய்யப்பட்ட தொகை | ரூ 2,55,600.00 (ரூபா இரண்டு இலட்சத்து ஐம்பத்தையாயிரத்து அறுநூறு மட்டும்) |

**அட்டவணை 2**

| | |
|---|---|
| மாகாணம் | மேல் மாகாணம் |
| மாவட்டம் | கொழும்பு |
| பிரதேச செயலாளர் பிரிவு | கொழும்பு |
| கிராமம் | சேதவத்த, வேரகொட |
| காணியின் பெயர் | நாகலகம் வீதியில் வரி மதிப்பீட்டு இல. 150/2 ஐ உடைய காணி |
| வரைபட இல. | ஆ. வ. இல. 9557 |
| துண்டு இல. | துண்டு இல. 148 |
| விஸ்தீரணம் | 0.0115 ஹெக்டயார் |
| வழக்கு இல. | டீஎல்ஏ 133/18 |
| வைப்புச் செய்யப்பட்ட தொகை | ரூ 2,592,000.00 (ரூபா இருபத்தைந்து இலட்சத்து தொண்ணூற்றி இரண்டாயிரம் மட்டும்) |

மேற்குறித்த காணித் துண்டுகளுக்கு உரித்துக் கோருவோர் தத்தமது உரித்துரிமையை கொழும்பு மாவட்ட நீதி மன்றத்தில் சமர்ப்பித்து/ முன்வைத்து தமக்குரிய நட்டஈட்டுத் தொகையை பெற்றுக் கொள்ளுமாறு பொது மக்களை தொடர்ந்தும் கேட்டுக் கொள்கின்றேன்.

06 - 911